பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 27 புதன்கிழமை 13.11.2024 கதிர் 006

## இனி இது ரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறை காரணமாக வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னர் சட்டவிரோதமாக ☞ 2

## மியான்மாரில் அடிமைகளாகும் இலங்கையர்கள் மீள அதிகரிப்பு

மியான்மார் இணையவழி மோசடியில் சிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மியன்மாரின் மியாவாடி பகுதியில் உள்ள இணையவழி மோசடி அடிமை முகாம்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் தற்போது தங்கியுள்ள இலங்கையர்கள் குழுக்களாக அனுப்பப்பட்டு வருவதாகவும் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழுவுக்கு நம்பகமான வட்டாரங்கள் மூலம் தகவல் கிடைத்துள்ளதாகவும், புதிதாக இலங்கையர்கள் அங்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மியன்மாரின் மியாவாடி பகுதியில் உள்ள இணையவழி மோசடி அடிமை முகாம்களுக்கு ஆட்சேர்ப்பு பல்வேறு வடிவங்களில் அதிகரித்துள்ளமை குறித்து தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் அதிக சம்பளத்திற்கு தகவல் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட தொழில் வழங்குவதாகக் கூறி கடத்தல்காரர்கள் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை இலக்கு வைப்பதாக அண்மைய விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிற நாடுகளில் தகவல் தொழில்நுட்பதுறையில் அதிக ஊதியம் பெறும் வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தருவதாக உறுதியளித்து ☞ 2

## விடத்தல்தீவில் வன விடுவிப்புக்கு எதிரான நீதிமன்றத் தடை நீடிப்பு

இறால் பண்ணை ஒன்றை உருவாக்குவதற்காக வில்பத்துக்கு அருகில் உள்ள விடத்தல்தீவு பாதுகாப்பு வனப் பகுதியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்காக வனஜீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதைத் தடுத்து விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை உயர் நீதிமன்றம் நீடித்துள்ளது.

விடத்தல்தீவு பாதுகாப்பு வனப் பகுதியில் இருந்து 168 ஏக்கரை விடுவிப்பதற்கான குறித்த ☞ 2

## 12 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் மாற்றம்

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாக செயற்பட்ட 12 வாக்களிப்பு நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான யாழ். மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார்.

ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு ☞ 2

## தமிழ் அரசுக் கட்சி என்ற பெயரிலான போலித் தகவல் குறித்து எச்சரிக்கை

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஐ.ரி.ஏ.கே.போரம் பிரித்தானியா என்ற பெயரில் சமூக ஊடகங்களில் பகிரப்படுகின்ற போலி தகவல்களுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கிளைகள் இலங்கைக்கு வெளியே வேறு எந்த நாடுகளிலும் இல்லை எனவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

# பிரபாகரனின் பிறந்த நாளை கொண்டாடியே தீருவோம்

## சிவாஜிலிங்கம் அறிவிப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் பிறந்த நாள் மற்றும் தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அவற்றினை உடைத்தெறிந்து இம்முறையும் எழுச்சியுடன் அனுஷ்டிப்போம் என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் திட்டவட்டமாக தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த நாள் வரும் நவம்பர் 26 ஆம் திகதி உலகெங்கும் பரந்துவாழ்ந்துவரும் தமிழர்களால் கொண்டாடப்பட இருக்கிறது. அதேபோன்று நவம்பர் 27 ஆம் திகதி தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகளும் தமிழர் தாயகம் உள்ளிட்ட இடங்களில் வழமைபோன்று அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்திற்காக ஜனாதிபதி ☞ 2

## தேர்தல் பாதுகாப்புக்கு 90 ஆயிரம் படையினர்

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்களாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

## சமூக ஊடக தேர்தல் விதி மீறல்கள் நேற்று மட்டும் 490 முறையீடுகள்

சமூக ஊடகங்கள் ஊடாக நேற்று மதியம் 12.00 மணிமுதல் நள்ளிரவு 12.00 மணிவரை தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு மொத்தம் 490 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதுகுறித்து தேர்தல் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கைக்கமைய சமூக ஊடக நிறுவனங்கள் 184 முறைப்பாடுகள் தொடர்பான இணைப்புகளை நீக்கியுள்ளன.

இருப்பினும், 87 முறைப்பாடுகள் தொடர்பான இணைப்புகள் அல்லது உள்ளடக்கத்தை அகற்ற சமூக ஊடக நிறுவனங்கள் மறுத்துவிட்டன.

219 புகார்கள் தொடர்பான உள்ளடக்கத்தை சமூக ஊடக நிறுவனங்கள் இன்னும் மதிப்பாய்வு செய்யவில்லை என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வெறுப்புப் பேச்சு தொடர்பில் 67 முறைப்பாடுகளும், பொய்த் தகவல்கள் தொடர்பில் 52 முறைப்பாடுகளும், இனம் மற்றும் மதத்திற்கு எதிரான அவதூறு அறிக்கைகள் 179, தேர்தல் பிரச்சாரத்திற்கு சிறுவர்களைப் பயன்படுத்துதலுக்காக 39 மற்றும் தவறான தகவல் ☞ 2



## விசாரணைக்கு வர வேறு நாள் தரும்படி கேட்கிறார் பிளையான்

பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று ஆஜராகுமாறு பிள்ளையானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தன்னால் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு இன்றைய தினம் வர முடியாது எனவும், அதற்கு மாறாக நவம்பர் 18 முதல் 25 வரையான காலப்பகுதிக்குள் ஒரு திகதியை ஒதுக்கினால் தன்னால் வர முடியும் எனவும் பிள்ளையான் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்

இதேவேளை, இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் நேற்று நடத்துவதற்கு ஏற்பாடு ☞ 2

## பரீட்சையில் அரசியல் வினாக்கள் அமைச்சு மட்டத்தில் விசாரணை

தவணைப் பரீட்சை வினாத்தாள் ஒன்றில் அரசியல் தொடர்பான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறித்து அமைச்சு மட்டத்தில் விரைவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு ஏற்கனவே தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

களுத்துறை மாவட்ட பாடசாலையொன்றில் இரண்டாம் தவணைப் பரீட்சையில் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ☞ 2

## மின்சார கட்டணக் குறைப்புக்கான புதிய முன்மொழிவு அடுத்த வாரம்

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான புதிய பிரேரணையை எதிர்வரும் வாரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான முன்மொழிவுகள் இதற்கு முன்னரும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த பிரேரணையை மீளாய்வு செய்து நவம்பர் 8 சமர்ப்பிக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ☞ 2

## தேர்தலைக் கண்காணிக்க உள்ளூரில் 2 ஆயிரம் பேர்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்காக 2000 கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக கஃபே அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியை கண்காணிப்பதற்காக கஃபே அமைப்பின் மூலம் 26 ☞ 2

## இனி இது .....

இலங்கைக்குள் வாகனங்களை இறக்குமதி செய்தமோசடிவிவகாரம்மிகப்பெரியளவிலான 'ஸ்கம்'மாக வளர்ந்து செல்லும் என்று தெரிகிறது.

இந்தவிவகாரத்தில்ஏற்கனவே முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மறறும் அவர்து மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரின் சொகுசு வாகனம் விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவை போக இப்போது கண்டியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரும் இந்த விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளார். அவரிடம் இதுபோன்று சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 2 வாகனங்கள் உள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இப்போது அவர் இலங்கையிலிருந்து தப்பிச் சென்றுவிடாமல் இருப்பதற்கான தடை உத்தரவை பொலிஸார் நீதிமன்றத்திடம் இருந்து பெற்றுள்ளனர்.

கண்டியைச் சேர்ந்த விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளரான இந்த வர்த்தகர் நாட்டை விட்டு வெளியேற தடை விதித்து கண்டி நீதிவான் வாசனா நவரத்ன நேற்றுத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

சட்டவிரோத வாகனங்கள் தொடர்பில் வாக்குமூலம்வழங்கவருமாறுபலதடவைகள் சந்தேகநபருக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவர் வரவில்லை. இதையடுத்து அவர் வெளிநாட்டுக்குத்தப்பிச்செல்லவாய்ப்புள்ளதாக கண்டி குற்றப் புலனாய்வு பிரிவினர் விடுத்த கோரிக்கையை நீதவான் ஏற்றுக்கொண்டார்.

கண்டியில் உள்ள கார் விற்பனை நிலையத்தின் உரிமையாளர் என கூறப்படும் டொன் இசுரு பிரதீப் சத்தாதிஸ்ஸ சேரம் என்பவருக்கு எதிராகவே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகரின் வீட்டிலிருந்து பி.எம்.டபிள்யூ. நவீனபந்தயகாரொன்றும்மிட்சுபிஷிஜீப்ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட கார்களை ஆய்வு செய்து அரச பகுப்பாய்வாளர்கள் பி.எம்.டபிள்யூ. ரக கார் இலங்கையில் அசெம்பிள் செய்யப்பட்ட வாகனம் எனவும், மிட்சுபிஷி ரக ஜீப்பின் செஸி எண் கழற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்தே வர்த்தகரை வாக்குமூலம் தர வருமாறு பொலிஸார் அழைப்பு விடுத்தனர். ஆனால் தன்னையும் கைது செய்துவிடுவார்களோ என்று அஞ்சி வர்த்தகர் பொலிஸார் முன்பாக ஆஜராகவில்லை என்று கருதப்படுகின்றது.

விரைவில் இதுபோன்ற இன்னும் பலவாகனங்கள் சிக்கும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். வழக்குகளில் அவை சட்டவிரோதமாக இலங்கைக்குள் கட்டத்தப்பட்டவைஎன்றுநிருபிக்கப்பட்டபின்னர் அவை பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்படும் என்றும் தெரிகிறது.

ரணிலின் ஆட்சியின்போது தலைகால் புரியாமல் ஆடியவர்கள் இப்போது அதற்கான கர்மவினையைச்செலுத்தவேண்டியவர்களாகி உள்ளனர்.

..........................................

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ் . தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழுவொன்றுதனக்குதெரியாமல் தன்னுடைய பெயரை வேட்பாளர் பட்டியலில் சேர்ந்துள்ளதாக பெண்ணொருவர் நேற்றுத் தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுவரை காலமும் தனக்கு இந்த விடயம் தெரியவரவில்லை என்றும் திங்கட்கிழமை தனது மாணவி ஒருவர் தொலைபேசி அழைப்பினை எடுத்து, தேர்தலில்போட்டியிடுகிறீர்களாஎனவினாவிய போதே, தனது பெயர் வேட்பாளர் பட்டியலில் வந்திருந்தமை தெரிய வந்தது என்றும் அந்தப் பெண் முறையிட்டுள்ளார்.

அதனை உறுதிப்படுத்திக்கொள்ள யாழ் . மாவட்டதேர்தல்திணைக்களஅலுவலகத்திற்கு வந்த அவர், அது என்னுடைய பெயர்தான் என்பதை உறுதிப் படுத்திய பின்னர் தனது அனுமதியின்றி தனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சுயேட்சை குழு தலைவர் உள்ளடக்கிஉள்ளார்என்றுமுறையிட்டுள்ளார்

இன்னும் இதுபோன்ற திருக் கூத்துக்கள் என்னவெல்லாம்பார்க்கவேண்டிஇருக்குமோ!.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## பிரபாகரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுரகுமாரதிசநாயக்கவவுனியாவந்தபோது வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் வவுனியா மாவட்ட தலைவி உள்ளிட்ட நால்வருக்கு எதிராக நீதிமன்ற தடையுத்தரவு பொலிசாரால் பெறப்பட்டிருந்தமைமனிதஉரிமைமீறலாகும். ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பதனையே இவ்வாறான விடயங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இதேபோன்றுவரும்நவம்பர்26,27ஆகிய நாட்களில்நிகழ்வுகளை மேற்கொள்வதற்கும் தடைகள் ஏற்படுத்தப்படலாம். அவ்வாறு தடைகள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அவற்றை உடைத்தெறிந்து தமிழீழத் தேசிய எழுச்சி நாள் கொண்டாட்டங்களை கொண்டாடியே தீருவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சமூக ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான உள்ளடக்கத்தின் மீது 29 மற்றும் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய இணைப்புகளுக்காக 124 முறைப்பாடுகள் என பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றில் வெளியிட்டுள்ளது.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தது.

இதற்கு இரண்டு வார கால அவகாசம் அளிக்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தது.

இதன்படி, புதியமின்கட்டணமுன்மொழிவு அடுத்த வாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

## விடத்தல்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தமானிஅறிவித்தல்வெளியிடப்பட்டிருந்தது.

எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், இடைக்கால உத்தரவை ஜூலை 29ஆம் திகதி வரை நீடிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## 90 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்ட காலத்தில் இருந்து நேற்று வரை தேர்தலுடன் தொடர்புடைய பாரதூரமான சம்பவங்கள் ஏதும் பதிவாகவில்லை. கடந்த காலங்களை காட்டிலும் இம்முறை சுமுகமான தன்மையே காணப்படுகிறது.

தேர்தலுடன் தொடர்புடையதாக பொலிஸ் நிலையங்களுக்கு 496 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் மாத்திரம் 478 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த எண்ணிக்கையில் 14 வேட்பாளர்கள் அடங்குகின்றனர். அத்துடன் 116 வாகனங்கள் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர் ஒருவர் வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள், வயதுமுதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெற வேண்டும்.

தேர்தல் பணிகளின் நிமித்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் நேரடியாக கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் 3200 விசேட அதிரடி படையினரும், 6000 இணை சேவை உத்தியோகஸ்த்தர்களும், 11 ஆயிரம் முப்படையினரும், 12227 சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

3109 நடமாடும் சேவைகளும், வாகன சோதனைகளுக்காக 269 வீதி தடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1591 தற்காலிக தொழிலாளர்கள் கடமைகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்பு கடமைகளுக்காக 4525 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்களாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் என்றார்.

## தேர்தலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட இணைப்பாளர்களும், அதேபோன்று 160 நீண்டகால கண்காணிப்பாளர்களும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தேர்தல் பிரசார நிதியை கண்காணிப்பதற்காக 3 மாவட்டங்களில் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம்) 23 நீண்டகால கண்காணிப்பாளர்களை நிறுவி அதன் ஊடாக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அதேபோன்று அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் மேற்கொள்ளும் செலவு கண்காணிப்பட்டிருக்கிறது என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கஃபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மானஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் இதுவரையான காலப்பகுதிக்குள் 847 முறைப்பாடுகள் கஃபே அமைப்பில் பதிவாகியுள்ளன. அவ்வாறு பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் பெரும்பாலானவை தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை தொடர்பில்தான் பதிவாகியிருக்கின்றது.

இதேநேரம்வன்முறைகள்தொடர்பாகவும் சில முறைப்பாடுகள் கஃபே அமைப்புக்கு தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் பதிவாகியிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலின்போது தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி மிகவும் ஒரு சுமூகமான சமாதானமான காலமாக காணப்பட்டாலும்இம்முறைபொதுத்தேர்தலில் சிலபிரதேசங்களில்வன்முறைகள்இடம்பெற்று இருப்பதனை அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.

இம்முறை நடைப்பெறவிருக்கின்ற தேர்தலினை வன்முறையற்ற ஒரு சமாதானமான தேர்தலாக நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கஃபேஅமைப்புஅனைத்துஅரசியல்கட்சிகள், சுயேட்சை குழுக்கள் அதேபோன்று அரசியல் கட்சி அபேட்சகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பு தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் தடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்தலைவரும்நாடாளுமன்றத்தேர்தல் மட்டக்களப்பு வேட்பாளருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர் நெஷனல் அமைப்பு, மாவட்ட உதவி தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் தேர்தல் பிணக்குகள் தீர்க்கும் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் இந்த ஊடகவியலாளர் சந்திப்புத் தடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில், தேர்தல்கள் சட்டங்களுக்கு முரணான வகையில் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

## மியான்மாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களை ஈர்க்கின்றனர். இவ்வாறு ஈர்க்கப்பட்டவர்கள் வேலை வாய்ப்புக்கான நேர்காணல் என்ற போர்வையில் துபாய் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மியன்மாரின் மியாவாடி பகுதியில் உள்ள இணையவழி மோசடி அடிமை முகாம்களுக்கு சட்டவிரோதமாக வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி முகாம்களில் அவர்கள் மின்சார தாக்குதல் மற்றும் உடல் ரீதியான கொடூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் மன அழுத்தத்துக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்என்றுவிசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

சட்டவிரோத குடியேற்றங்களை தவிக்குமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம், ஏனெனில் அவை மிகவும் ஆபத்தானவை மற்றும் இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறுகின்றன. வேலை தேடுபவர்கள் சுற்றுலா விசாவில் ஏனைய நாடுகளுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்' என தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழுவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பான, சட்டப்பூர்வ குடிபெயர்வுகளை தெரிவு செய்யவும் விழிப்புடன் இருங்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கடத்தல் நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடு செய்யுங்கள்

ஆபத்தில் இருக்கக்கூடிய வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் மற்றும் இலங்கையில்உள்ளஅவர்களதுஉறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பற்றி சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்படக்கூடியநபர்களைப்பாதுகாக்கவும்.

தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு, பின்வரும் தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் முகவரி (0112102570/076 844 7700, nahttfsrilanka@gmail.com) மூலம் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகள் தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு பொதுமக்களைக்கேட்டுக்கொள்ளப்படுவதோடு, முறைப்பாடு செய்பவர்களின் தகவல்கள் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் வலியுறுத்துகிறது.

## 12 வாக்களிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம்சரவணைபள்ளம்புலம்முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்திற்கும் நாரந்தனை தெற்கு பொது நோக்கு மண்டப வாக்களிப்புநிலையம்நாரந்தனைதெற்குகிராம சக்தி பொது மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இல 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்திற்கும் அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்துக்கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வசாவிளான் மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றப்ட்டுள்ளது.

மானிப்பாய் தொகுதியில் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 வாக்களிப்புநிலையம்தாவடிதெற்குசனசமூக நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

கோப்பாய் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம்அச்சுவேலிஆரம்பபாடசாலைக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கும் மாற்றப்பட்டுள்ளது

உடுப்பிட்டி தொகுதியில் இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும், கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை செட்டித்றை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

நல்லூர் தேர்தல் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் ஷ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய மண்டபத்திற்கும், நாவலர் கலாச்சார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி கணபதி கலாச்சார மண்டபத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

## பரீட்சையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினாத்தாளில் அரசியல் கட்சி தொடர்பான 5 வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை தொடர்பிலேயே இந்த விசாரணை நடத்தப்படுகிறது.

இந்த வினாத்தாள் சம்பந்தப்பட்ட பாடசாலையினாலேயே தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சு மட்டத்திலோ அல்லது வேறு எந்த நிறுவன மட்டத்திலோ இதற்குத் தொடர்பில்லை எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக வலைத்தளங்களை தேர்தல் காலத்தில் முறையாக பாவிக்கும்படி கபே வலியுறுத்தல்





சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு கபே அமைப்பின் 'அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் கட்சி வேட்பாளர்கள், சுயேச்சை குழுக்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்களை தெளிவூட்டும் நிகழ்வும் கபே அமைப்பின் கண்காணிப்பில் ஈடுபட்டுவரும் கண்காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடலும் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ் தலைமையில் கல்முனை பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன்பின்னர் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலைவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தினையும் பார்க்கும்போது வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் உருவாகிறது.

அதாவது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம். அதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிடலாம்.

அதேபோல இந்த பொதுத் தேர்தலிலும் இதுவரை பாரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை. இதேவேளை பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கினை வழங்குகிறது. இவற்றை நாம் கண்காணிக்கும்போது அபேட்சகர்களுக்கு எதிரான சேறுபூசக்கூடிய, இழிவுபடுத்தக்கூடிய போலிப்பிரச்சாரங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதை அவதானிக்க முடிகிறது. சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகிறது. இது தவிர கடந்த கால தேர்தலில் காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் என முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

கபே அமைப்பு தேர்தல் தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது.

இதுவரை கபே அமைப்புக்கு பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுவது தொடர்பாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அத்துடன் சமூக வலைத்தளங்களை பாவித்து வேட்பாளர்களை இழிவுபடுத்துகின்ற பொய்யான பிரசாரங்களும் வீடியோக்களாக போலி முகநூல் மற்றும் வட்ஸ்அப் ஊடாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பாதகம் ஏற்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.



எனவே, அனைத்து அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்திய பிரமாணம் ஒன்றை பெறுகின்றோம்.

எனவே, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும்.

வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என கபே அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

இருந்தபோதும் அரசியல் கட்சியின் வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் வேண்டிக்கொள்வது, இதுவரை காலப்பகுதியில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத நிலையில், தேர்தல் பிரசார நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபட்டு வந்தீர்களோ அதேபோன்று தேர்தல் தினத்திலும் அதனை தொடர்ந்து வரக்கூடிய 7 நாள்களுக்குப் பின்னரான காலப்பகுதிக்குள்ளும் சமாதானமான தேர்தலுக்காக ஒன்றுபடவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றார்.

இந்த கலந்துரையாடலில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீனுடன் கபே அமைப்பின் சட்டத்துறை பொறுப்பாளர் சட்டத்தரணி ஹரீன்தெர வனகள, மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ் ஆகியோர் இணைந்திருந்தனர். (05)

# வீதியில் குப்பை கொட்டுவோர் மீது இனிமேல் தீவிர சட்டநடவடிக்கை

## யாழ். மாநகர சபை அதிரடி




வீதியில் குப்பை கொட்டுபவர்களை இனங்கண்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதில் யாழ்ப்பாணம் மாநகர சபை கவனம் செலுத்தி வருகிறது.



ஒட்டுமடம் சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை ஊடாக காரைநகர் செல்லும் வீதியில் விலங்குக் கழிவுகள் ஆங்காங்கே காணப்படுவதோடு, வைத்தியசாலை கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் என்பனவும் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருகின்றன.

இதனால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், கொட்டப்படும் கழிவுகளை உண்பதற்கு நாய்கள் அவ்விடத்துக்குச் செல்வதால் வாகன விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

இதைப் பற்றி பல தடவை ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், சிசிரிவி கமராக்கள் மூலம் 24 மணிநேரமும் அப்பகுதியை கண்காணிப்பதற்கும், வீதியில் கழிவுகளை கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகர சபை தயாராகியுள்ளது.

அத்துடன், அப்பகுதியிலிருந்து 100 மீற்றர்கள் தொலைவில் உள்ள மீள்சுழற்சி நிலையத்துக்கு சென்று குப்பை பொதிகளை கொடுக்க முடியும் என்ற அறிவித்தலையும் மாநகர சபை வீதிகளில் காட்சிப்படுத்தியுள்ளது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அடுத்த 5 வருடங்களுக்கான தலைவிதியை தீர்மானிக்கும் நேரம்

பொதுத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நாளை வாக்களிப்பு. மக்கள் நேரகாலத்துடனேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். நாளை முன்னிரவுமுதல்தபால்மூலவாக்களிப்புமுடிவுகள் வெளியாகத் தொடங்கும். அதிகாலையில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது ஓரளவிற்கு உறுதியாகிவிடும். மாலை 4 மணிக்கு முன்னர், உத்தியோகபூர்வமான அனைத்து முடிவுகளும் வெளியாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இம்மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அரசமைப்பின் 70 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசுத்தலைவர் அநுர குமாரதிசாநாயக்கவினால் விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நேற்று இந்த விவரம் அறிவிக்கப்பட்டது.

அரசுத் தலைவரின் ஆணைப்படி, அவரது செயலாளர் கலாநிதி என். எஸ். குமாரநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது,

”இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக்குடியரசின்தலைவராகிய அநுரகுமார திசநாயக்க ஆகிய நான், இரண்டாயிரத்து இருபத்திநான்காம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தியோராம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர நாடாளுமன்றத்தின் கூட்ட மண்டபத்தில் நாடாளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கின்றேன் என்பதை இத்தால் சகலரும் அறிவீராக” என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகமொத்தத்தில் அடுத்த 5 வருட காலத்திற்கு இலங்கை மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் நாளாக நாளை அமையப் போகின்றது. மக்கள் தெளிவாகவும் நுண்திறனோடும் சிந்தித்து வாக்களிப்பதன் மூலமே தமது எதிர்காலத்தைச் சிறந்ததாக வடிவமைக்கமுடியும். தேர்தல் விதிகளை மீறி மக்களின் மனங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் சட்டத்திற்குப் புறம்பாக நேற்றும்கூட வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் தமது சுவரொட்டிகளை ஒட்டியும் சின்னங்களையும் தமது விருப்பு வாக்கு எண்ணையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் இறைத்துவிட்–டும் மோசடியாகச் செயற்படும் வேட்பாளர்களை நிராகரித்து, உண்மையும் நேர்மையும் மக்கள் சேவை மனப்பான்மையும் உள்ள பிரதிநிதிகளை தெரிந்தெடுக்க மக்கள் முன்வரவேண்டும்.

# டிரம் மீண்டும் வந்தது எப்படி?

**ராஜன்**

அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்பின் வெற்றிக்கும் கமலா ஹாரிஸின் தோல்விக்கும் முக்கியமான காரணம் சுருக்கமாகச் சொன்னால் - ஜோ பைடன்! (கூடவே, இனம், நிறம் போன்றவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம்). அல்லாமல், செய்வாரோ மாட்டாரோ, வரிக் குறைப்பு போன்ற அறிவிப்புகளைப் பணக்கார வாக்காளர்கள் பெரிதும் வரவேற்றனர்.

2020 தேர்தலைவிடவும் 2024 அதிபர் தேர்தலில் புலம்பெயர்ந்தோர் பிரச்சினை ஐந்து மடங்கு கூடுதலாக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஏதோ குடியேறி வந்திருப்போர் எல்லோருமாக



ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கமலா ஹாரிஸைப் பொறுத்தவரை முதலில் நேரிட்ட ஒரு கோணல், முற்றும் வரையும் தொடர்ந்துவிட்டது. ஏனெனில், ஜனநாயகக் கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் தற்போதைய அதிபர் ஜோ பைடன்தான். உள்ளபடியே அந்த இடத்துக்கான - போட்டிக்கான தயாரிப்பிலேயே இல்லை கமலா ஹாரிஸ். வேட்பாளராகவெல்லாம் பைடன் அறிவிக்கப்பட்டு, முதல் விவாதத்தில் டிரம்ப்பிடம் திணறியபோதுதான், களத்துக்குள் கமலா ஹாரிஸைக் கொண்டுவர நேரிட்டது. அதுவரையிலும் ஜோ பைடனைத்தான் எல்லாரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இடையில்தான் வேறு வழியின்றிக் கைமாற்றி விட்டார் பைடன். ஒட்டுமொத்தமாக ஜோ பைடனின் பலவீனங்களையும் சுமைகளையும் அவருடைய ஆட்சிக்காலத் தவறுகளையும் சேர்த்தே கமலா ஹாரிஸ் சுமக்க நேர்ந்துவிட்டது (கால்களில் கட்டைகளைக் கட்டிக்கொண்டு ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்ற மாதிரிதான்!).

கடந்த ஆட்சிக்காலத்தில் அமெரிக்க மாகாணங்கள் முழுவதும் பண வீக்கம் அதிகரித்துச் சென்ற வேகத்துக்கு மக்களுக்கான ஊதியங்கள் உயரவில்லை. ஒட்டுமொத்தமாகப் பார்க்க அமெரிக்கா வளர்ச்சி பெற்றிருப்பதாகப் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டாலும் அதை மக்கள் கொஞ்சமும் கண்டுகொள்ளவில்லை. ஏனெனில், பெரும்பாலான சாதாரண அமெரிக்கர்கள் நாட்டின் நிலைமையை மோசமாகவே கருதினர். நாடு மிக மோசமான திசையில் சென்றுகொண்டிருப்பதாகவும் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவுமே சுமார் 75 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் கருதினர் (இது ஓரளவு உண்மையுங்கூட, ஏனென்றால், அமெரிக்கா மட்டுமல்ல, மேலும் பல மேலை நாடுகள் பொருளாதார ரீதியாகத் திணறிக் கொண்டிருக்கின்றன; பிரிட்டனின் நிலைமை எல்லாம் படுபயங்கரம்!). இந்தச் சூழலில்தான் வரிச் சலுகைகள், நாட்டைவிட்டு வெளியேறிய தொழிற்சாலைகளை மீண்டும் அமெரிக்காவுக்கே கொண்டுவருதல் போன்ற டிரம்ப்பின் வாக்குறுதிகள் சிறப்பாகச் செயல்பட்டன.

அமெரிக்காவையே விழுங்கிவிடப் போகிறார்கள் என்கிற அளவுக்கு இந்தப் பிரச்சினை டிரம்ப் ஆதரவாளர்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்டது.

இதில் கொடுமை என்னவென்றால், இந்தத் தேர்தலில் லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து வந்தவர்களிலேயே 54 சதவிகிதத்தினர் டிரம்ப்பை ஆதரித்து வாக்களித்திருப்பதுதான் (2020-இல் இது வெறும் 36 சதவிகிதமாக இருந்தது). இதற்கான வினோதமான காரணம் என்னவென்றால், ‘நாம் வந்துவிட்டோம்தானே, இனிமேலும் அங்கிருந்து நம்மவர்கள் யாரும் வர வேண்டாம். டிரம்ப் வந்தால்தான் அவர்களைத் தடுத்து நிறுத்துவார்’ என்று இவர்கள் நம்புவதுதான்! ஏனென்றால், புலம்பெயர்ந்து வருவோருக்கும் குடியேறியோருக்கும் எதிரான நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் டொனால்ட் டிரம்ப், சட்ட விரோதமாகக் குடியேறியோரை மொத்தமாக நாட்டைவிட்டு வெளியேற்றப் போவதாகவும் கூறிவருகிறார். அனேகமாக அவ்வாறே செய்தும்விடுவார் என்ற அச்சம் இப்போது எல்லாரிடமும் பரவத் தொடங்கியிருக்கிறது.

பெண்களின் வாக்குகளில் கணிசமானவற்றை இழந்த டிரம்ப், ஆண்களின் வாக்குகளில் அதே அளவுக்குக் கூடுதலாகப் பெற்றிருக்கிறார், இவற்றுக்கெல்லாமே அவருடைய ஆணாதிக்கப் பேச்சுகள்தான் காரணம். எதிர்த்துப் போட்டியிட்டவரும் பெண்ணான கமலா ஹாரிஸ் என்றாகிவிட்டதால் டிரம்ப்பின் எரிகிற ஆணாதிக்க மனோபாவத்துக்கு எண்ணெய் ஊற்றியதைப் போலாகிவிட, அமெரிக்காவின் கணிசமான ஆண்களும் அதே பாதையைப் பின்பற்றி, ‘டிரம்ப்புக்கு வாக்களிப்பதன் மூலம்’ தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்தியிருக்கின்றனர் (எல்லாம் ஒரு ஈகோதான்!).

அமெரிக்காவில் பெண்களைப் பாதிக்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ள கருக்கலைப்பு உரிமை விஷயம், நினைத்த அளவுக்கு இந்தத் தேர்தலில் (கமலா ஹாரிஸ் குழுவினர் எதிர்பார்த்த அளவுக்கு) தீர்மானிக்கும் காரணியாகச் செயல்படவில்லை என்று சிஎன்என் ஆய்வொன்று தெரிவிக்கிறது.

ஒட்டுமொத்த அமெரிக்காவிலும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# டிரம் மீண்டும் வந்தது எப்படி?

4ம் பக்கதொடர்ச்சி ...........

பெண்களுக்கு இருந்த கருக்கலைப்பு உரிமையைச் சில மாதங்களுக்கு முன் ரத்து செய்த உச்ச நீதிமன்றம், இதுபற்றி அந்தந்த மாகாணங்களே தீர்மானித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துவிட, தற்போது ஒவ்வொரு மாகாணத்திலும் பெண்கள் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் கருக்கலைப்பு உரிமை வழங்கப்படும் என்று கமலா ஹாரிஸ் வாக்குறுதியளிக்க, நோ நோவென நேரெதிராக நின்றார் டொனால்ட் டிரம்ப். டிரம்பின் வெற்றிக்குப் பின்னால் இனி என்ன நடக்கப் போகிறது எனத் தெரியவில்லை. பாவம், அமெரிக்கப் பெண்கள்.

இந்தத் தேர்தலில் திடீரென ஜோ பைடனுக்குப் பதிலாக ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ் எப்போது அறிவிக்கப்பட்டாரோ அன்று முதலே கறுப்பர்கள், கலப்பு இனத்தினர், வெளிநாட்டினர், குடியேறியோர் என மக்களைப் பிளவுபடுத்தும் இன வெறுப்புப் பிரசாரத்தை டொனால்ட் டிரம்ப்பும் அவருடைய ஆதரவாளர்களும் தொடங்கிவிட்டார்கள் என்றால் மிகையில்லை.

இதன்மூலம் வெள்ளையினவாக்குகள்-ஒட்டுமொத்தமாக வலதுசாரி வாக்குகள் டிரம்ப்பை நோக்கி நகர்ந்துவிட்டன. மேலும், பழைமைவாதம், கருக்கலைப்புக்கு எதிரான நிலைப்பாடு போன்றவற்றால் கிறிஸ்துவர்களின் வாக்குகளும் குறிப்பாக இவாஞ்செலிகள் பிரிவு கிறிஸ்துவர்கள் வாக்குகளும் டிரம்ப்புக்கு ஆதரவாக மாறிவிட்டன.

வெள்ளையினத்தின், கிறிஸ்துவத்தின் செல்வாக்கு மிகுந்த நாடாகத்தான் அமெரிக்கா திகழ வேண்டும் என்ற மனநிலை கொண்டோர் ஒட்டுமொத்தமாக டிரம்ப்பைத் தாங்கிப் பிடிக்க, இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் கமலா ஹாரிஸ் தரப்பினர் தோற்றுப் போய்விட்டதாகவே அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். சிக்கலான இந்தப் பிரச்சினையில் ஜனநாயகக் கட்சியினருக்கு என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் மிகச் சரியாகத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுவிட்டார் டிரம்ப்.

தவிர, ஏற்கெனவே அதிபராக இருந்த கறுப்பினத்தவரான ஒபாமாவைப் போன்ற உந்துசக்தியுமல்லர் கமலா ஹாரிஸ். இவருக்கென தனிப்பட்ட முறையிலான ரசிகர் கூட்டமோ, ஆதரவாளர்கள் திரளோ இல்லை எனலாம். ஆனால், எதிர்த்தரப்பில் என்னதான், எவ்வளவுதான் உளறிக்கொட்டிக்கொண்டிருந்தாலும் டிரம்ப் ஆதரவாளர்கள் எப்போதும்போல அவரைத்தான் வலுவாக ஆதரித்துக்கொண்டிருந்தார்கள், கலையவே இல்லை. எவ்வளவு பெரிய பலம்!

சிறப்பாகவே கமலா ஹாரிஸ் பேசியபோதிலும்கூட, பொதுவானவாக்காளர்களிடையே, டிரம்ப்போல பரபரப்பையும் அதிர்ச்சிகளையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தவில்லை அவருடைய பேச்சுகள். இயன்றவரையிலும் மிகவும் நாகரிகமான முறையிலேயே தனது பிரசாரத்தை கமலா ஹாரிஸும் ஜனநாயகக் கட்சியினரும் கொண்டுசென்றனர். அவரை ஆதரித்து நின்ற, பிரசாரம் செய்த பெரும்புள்ளிகளும்கூட நாகரிகமாகவே நடந்துகொண்டனர். ஆனால், தரை லெவலுக்கு இறங்கிவந்து பிரசாரம் செய்தார் டிரம்ப்.

பூனைக் கறி தின்கிறார்கள், கமலா ஆட்சிக்கு வந்தால் வளர்ப்புப் பிராணிகளையெல்லாம் இவர்கள் சாப்பிட்டுவிடுவார்கள் என்பதெல்லாம் என்ன லெவல்? இதனிடையே, டிரம்ப்பின் இணைபிரியா நண்பராகக் காட்டிக்கொண்டு, அவரை ஆதரித்து முழுவீச்சில் பிரசாரமும் செய்த எக்ஸ் (பழைய டிவிட்டர்) தளத்தின் உரிமையாளரும் உலகின் பெரும் பணக்காரருமான எலான் மஸ்க்கோ, சொல்லத் தரமற்ற அளவுக்கு இறங்கிச் சென்று பல அவதூறான கருத்துகளைப் பகிர்ந்து பரப்பிக் கொண்டிருந்தார்.

டொனால்ட் டிரம்ப் வகையறாவின் 'ஒரு பொம்பளயால எப்படிங்க அமெரிக்கா மாதிரி ஒரு நாட்டை ஆட்சி செய்ய முடியும்?' என்ற ஆணாதிக்க - பாலின வெறுப்புப் பிரசாரங்கள் உச்சம் தொட்டன. தொடக்கத்தில் நிலையாகவும் வலுவாகவும் இருந்த கமலா ஹாரிஸின் ஆதரவு தளங்கள் எல்லாம் இத்தகைய பிரசாரங்களால் தேர்தல் நெருங்க நெருங்க கலகலக்கத் தொடங்கிவிட்டன.

இன்னமும் சொல்லப் போனால், உலகின் நம்பர் ஒன் நாடெனக் கூறப்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்காவில், ஒரு பெண்ணால் ஆட்சி நடத்த முடியும் என்று பெரும்பாலான மக்கள் நம்பவே மறுத்துவிட்டிருக்கின்றனர் (நம்ம மக்கள் எல்லாம் எங்கேயோ இருக்கிறார்கள், 1966-லேயே இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தார்; தோற்ற பிறகும் மீண்டும் வெற்றி பெற்றார்). 2016 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் இதே டிரம்ப்பிடம்தான் ஹிலாரி கிளின்டன் என்ற பெண்மணியும் தோற்றுப் போனார், இத்தனைக்கும் அவர் வெள்ளையினத்தவர்தான். இந்தத் தேர்தலில் தோல்விக்கு கமலா ஹாரிஸின் நிறமும் இனமும் சேர்ந்துகொண்டுவிட்டன.

அதிபராக பொறுப்பேற்ற பிறகுதான் தேர்தல் பிரசார காலத்தில் டொனால்ட் டிரம்ப் வெளியிட்ட அதிரடி – சரவெடி அறிவிப்புகளில் என்னென்னவெல்லாம் நடைமுறைக்கு வரப்போகின்றன என்பது தெரிய வரும் (கூடவே யார் யாருக்கெல்லாம் ஆப்புகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்பதுவும். டிரம்ப் வெற்றி பற்றி, நான் மிகவும் வருந்துகிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார் அவருடைய சகோதரர் மகள் மேரி எல் டிரம்ப்).

### இப்போதைக்கு ஒரே ஒரு சாம்பிள்!

தாய், தந்தை இருவருக்குமே குடியுரிமை இல்லாவிட்டாலும் இவ்வளவு காலமாக, அமெரிக்காவில் பிறப்பதாலேயே ஒரு குழந்தை உடனடியாகக் குடியுரிமையைப் பெற்றுவிடும் (ஜுதீ ஜுஷ்ஷமிஜு). ஆனால், பெற்றோரில் ஒருவரேனும் அமெரிக்கக் குடியுரிமை பெற்றிருந்தால் மட்டுமே குழந்தைக்குக் குடியுரிமை வழங்கப்படும் (இல்லாவிட்டால் பிறக்கும்போதே அந்தக் குழந்தையும் ஏதிலிதான்!) என்று தேர்தல் பிரசாரத்தில் குறிப்பிட்டிருந்தார் டிரம்ப். இதுவே அதிபர் பதவியேற்றதும் முதல் நாள் அவரால் பிறப்பிக்கப்படும் ஆணையாக இருக்கும் என்றும் டிரம்ப்பின் பிரசார இணையதளங்கள் அறிவித்திருக்கின்றன (இதன் மூலம் தேசபக்தியின் பெயரால் வெள்ளையர் ஈவி வந்தேறிகள் தியரி கட்டியெழுப்பப்பட்டது என்று கூறலாம்).

டிரம்ப் வெற்றிக்குப் பிறகு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்போது, பச்சை அட்டைக்காக (கிரீன் கார்டுக்காக) அமெரிக்காவில் காத்திருக்கும் 10 லட்சம் இந்தியர்களில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியர்கள் மட்டும் அல்ல, சட்டப்படியும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........



காலைக்கதிர் Kalaikkathir

# தொடர்மாடி குடியிருப்பு மின்தூக்கி உடைந்து வீழ்ந்து 4 பேர் படுகாயம்



கொழும்பு, கிராண்ட்பாஸ், முவதொர உயன தொடர்மாடி குடியிருப்பின் மின்தூக்கி உடைந்து வீழ்ந்ததில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காகச் சென்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்ஒருவரும்காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ்பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்பனை செய்த மூவர் கைது

பண்டாரகம, அட்டுலுகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக மாட்டிறைச்சி விற்பனையில் ஈடுபட்டுவந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, இறைச்சியாக்குவதற்காக வைக்கப்பட்டிருந்த உயிருள்ள இரண்டு மாடுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் பண்டாரகம, அடலுகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# லக்கலை வர்த்தகரின் வீட்டிலே துப்பாக்கி முனையில் கொள்ளை

லக்கலை, தேவாலதெனிய பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த இனங்காணாத ஐந்து நபர்கள், வர்த்தகரின் மனைவி மற்றும் தந்தையிடம் துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி அவர்களின் கைகளை கட்டி வைத்துவிட்டு வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டுதப்பிச்சென்றுள்ளதாக லக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொள்ளை சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

07 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்கள் , பணம் மற்றும் கார் உள்ளிட்ட பொருட்களே கொள்ளையிடப்பட்டுள்ளது.

கொள்ளையிட்டுச் சென்றதாகக் கூறப்படும் கார் கலேவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளிவிவகார அமைச்சர் விஜயம்!









வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு திங்கட்கிழமை பிற்பகல் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் பல்வேறு ஊழியர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது விமான நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

விமான நிலையத்தில் பணிபுரியும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வருடத்திற்கு ஒரு சீருடை மாத்திரமே வழங்கப்படுவதால் வருடத்திற்கு 3 சீருடைகளை வழங்குவதற்கு அமைச்சர் விஜித ஹேரத் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பின்னர், அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்க விமான நிலையத்தின் அனைத்து இடங்களையும் பார்வையிட்டார். (05)

# டிரம் மீண்டும் வந்தது எப்படி?

4ம் பக்கதொடர்ச்சி ...........

சட்டவிரோதமாகவும் (நுழைந்து) அமெரிக்காவில்வசிக்கும்மெக்சிகோ, பிரேசில் உள்பட எண்ணற்ற நாடுகளைச் சேர்ந்த பல லட்சம் பேர் பாதிக்கப்படவிருக்கிறார்கள்.

இதனிடையே, டிரம்ப் அதிபர் பதவியேற்கும் முன்னரே, கூடுதல் வினையாகசிலநாள்கள்முன், உரிய ஆவணங்கள் இல்லாவிட்டாலும் அமெரிக்கர்களை (அதாவது, ஏற்கெனவே அமெரிக்கக் குடியுரிமை பெற்றிருப்பவர்களை -வெளிநாட்டினராகவும்இருக்கலாம்) மணம்செய்துகொண்டவர்களுக்குக் குடியுரிமை வழங்கும் அதிபர் ஜோ பைடனின் திட்டத்தை டெக்ஸாஸ் நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது (திரும்புற பக்கமெல்லாம் அணை கட்டுறாங்களே!).

(2022 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, அமெரிக்காவில் 48 லட்சம் இந்திய அமெரிக்கர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 34 சதவிகிதத்தினர், அதாவது 16 லட்சம் பேர்அமெரிக்காவில்பிறந்ததாலேயே குடியுரிமை பெற்றவர்கள்!).

இந்த மாதிரியாகத் தங்களைத் தீவிரமாக ஆதரித்த அமெரிக்க - வெள்ளையினத்தவர்களின் மனம் குளிரும்படியாக, எச்1பி விசா உள்பட வேறு பல விஷயங்களிலும் அமெரிக்கர்கள் அல்லாதவர்களுக்கு / வெளிநாட்டினருக்கு எதிராக ஏராளமான அதிரடிகள் தயாராக இருக்கின்றன எனக் கூறப்படுகிறது. அதிபராக டிரம்ப் பதவியேற்றதும் ஒவ்வொன்றாக வெளிப்படலாம் (இப்போதே நாட்டைவிட்டு வெளியேறுவது பற்றி தேடத் தொடங்கிவிட்டார்களாம் அமெரிக்காவில் பலர். கூகுளில் தேடுவது கனடா செல்வதற்காக 1,270 சதவிகிதமும் நியூசிலாந்து செல்வதற்காக 2,000 சதவிகிதமும் அதிகரித்துள்ளது).

தேர்தல் என்றாலே வெறுப்புப் பிரசாரம்தான் என்பதில் அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. ஆனால், இந்த அளவுக்கு இறங்கிப் போகும் எனயாராவதுஎதிர்பார்த்திருப்பார்களா எனத் தெரியவில்லை. டிரம்ப் இறுதி வரைக்கும் சென்றார் என்றே கூறலாம்.

வென்றே தீர வேண்டும் என்ற வேகத்தில் கொலை முயற்சி சம்பவங்கள் (இவற்றில் எது உண்மை, எது திட்டமிடப்பட்டது என யாருக்கும் தெரியப் போவதில்லை) இன, நிற, பாலின வெறுப்புப் பிரசாரமும் எல்லாரையும் வெளியேற்றுவேன், இவர்களை எல்லாம் சிறையில் தள்ளுவேன் என்பது போன்ற தடாலடியான அறிவிப்புகளும்... அமெரிக்காவையும் அமெரிக்க வாக்காளர்களையும் அதிபர் தேர்தலையும் வேற லெவலுக்குக் கொண்டுசென்றுவிட்டிருக்கின்றன.

தோல்விக்குப் பிறகு கமலா ஹாரிஸ் குறிப்பிட்ட வரிகள் இங்கே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை: ‘வெற்றியைத்தான் இழந்திருக்கிறோம், போராட்டத்தை ஒருபோதும் கைவிட மாட்டோம்; பேரிருளில்தான் நட்சத்திரங்களின் ஒளியை உணர முடியும். நாம் இருண்டகாலத்துக்குள்நுழைவதாகப் பலர்கருதுகிறார்கள். நட்சத்திரங்களின் ஒளியைக்கொண்டு இருளை நிரப்புவோம்.’

2025, ஜனவரி, 20- அதிபராக மீண்டும் டொனால்ட் டிரம்ப் பொறுப்பேற்கவுள்ள நாள்! ஆட்டம் ஆரம்பம்!

ன்பின் குறிப்பு : அண்மைக் காலத்தில் எப்போதுமில்லாத அளவுக்குவந்தேறிகள், குடியேறிகள், வெளிநாட்டினர், கறுப்பர்கள், கலப்பினத்தவர் என்றெல்லாம் பேசுகிற, பிரசாரம் செய்கிற அமெரிக்க வெள்ளையர்கள் அனைவருடைய மூதாதையருமே சில நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அங்கே சென்று குடியேறியவர்களே, அதாவது, சென்றேறியவர்களே! உண்மையிலேயே அமெரிக்க மண்ணுக்குச் சொந்தமான செவ்விந்தியர்கள் போன்ற பூர்வகு டிகள் அனைவரும் ஒட்டுமொத் தமாக இவர்களுடைய முன்னோர்களால்தான் அழித்தொழிக்கப்பட்டனர் என்பதெல்லாம் பெருந்துயரக் கதை என்பதுடன் வரலாற்றின் நகைமுரணும்கூட.)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் சிறிபாகமவில் கொலை



இருநபர்களுக்குஇடையில்ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் கூரியஆயுதத்தால்தாக்கப்பட்டுஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என சிறிபாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக் கிழமைஇரவு இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மதகம அளுத்வத்த, கிலிமலை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் ஆவார்.

சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பாதுக்க பிரதேசத்தைச்சேர்ந்த 59 வயதுடைய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைசிறிபாகமபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மசாஜ் செய்வதாகக் கூறி வைத்தியரிடம் கொள்ளை

## 6 பேர் கைது

மசாஜ் செய்வதாக கூறி வைத்தியர் ஒருவரை ஏமாற்றி பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி குடியிருப்பின் அறை ஒன்றிற்கு அழைத்துச் சென்று கத்தியை காட்டி மிரட்டி 10 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச்சென்ற சம்பவம் தொடர்பில் பெண் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

தென் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் பணிபுரியும் வைத்தியர் ஒருவருடன் தொடர்பு கொண்ட பெண் ஒருவர் மசாஜ் சேவையை பெற்றுக்கொள்ள பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி குடியிருப்பு ஒன்றிற்கு வருமாறு கூறியுள்ளார்.

இதனால் இந்த வைத்தியர் தொடர்மாடி குடியிருப்பின் அறை ஒன்றிற்கு கடந்த 8 ஆம் திகதி அன்று சென்றுள்ளார்.

இதன்போது இந்த அறையில் மறைந்திருந்த சந்தேக நபர்கள் சிலர் வைத்தியரை தாக்கி நிர்வாணமாக்கி அதனை காணொளியாக எடுத்து கத்தியை காட்டி மிரட்டி வைத்தியரின் வங்கி கணக்கிலிருந்து 10 லட்சம் ரூபா பணத்தை மற்றுமொரு வங்கி கணக்கிற்கு வைப்பு செய்துள்ளனர்.

பின்னர் சந்தேக நபர்கள் வைத்தியரின் பணப்பையில் இருந்த 15,000 ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து இந்த வைத்தியர் இது தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் ஓட்டோ கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 44 மற்றும் 54 வயதான பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவார்.

இதனையடுத்து சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்ஏனையசந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19, 21, 22 மற்றும் 23 வயதுடைய இரத்மலானை பகுதியை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இலங்கை சிறையில் அடைபட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரி பாம்பன் பாலத்தில் மறியல்

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் பாலத்தில்மீனவர்கள்மறியல்போராட்டத்தில்ஈடுபட்டனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களைவிடுதலைசெய்யவலியுறுத்திவிசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் ஒருங்கிணைந்து செவ்வாய்கிழமை பாம்பன் பாலத்தில் வீதி மறியல் போராட்டம் நடத்தினர்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை தமிழக மீனவர்களின் 66 படகுகளை சிறைப்பிடித்து, 497 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு மீன்பிடி தடை சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில்வழக்கு பதிவுசெய்யப்படுகிறது. இதில் 90 மீனவர்கள் ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டு காலம் வரையிலும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டு வழங்கப்பட்டு இலங்கை சிறைகளில் தண்டனை கைதிகளாக உள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 16 ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதும், ராமேசுவரத்தில் நடைபெற்ற விசைப்படகு மீனவப் பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டத்தில், மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி நவம்பர் 12 ஆம் திகதி பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும், என அறிவித்தனர். இந்த போராட்ட அறிவிப்புக்கு நாட்டுப்படகு மீனவ அமைப்புகளும் ஆதரவு அளித்தன. முன்னதாக திங்கட்கிழமை ராமேசுவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் சாலை மறியல் போராட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி மீனவப் பிரதிநிதிகளுடன் அரசு அதிகாரிகள் நடத்திய அமைதிக்குழு கூட்டத்தில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதனால் மீனவர்கள் அறிவித்தபடியே நேற்று (செவ்வாய்கிழமை) காலை 9.30 மணியளவில் பாம்பன் சாலைப்பாலம்ஆரம்பிக்கும்இடத்தில்மறியல்போராட்டம் துவங்கியது. இந்த சாலை மறியல் போராட்டத்தால் ராமேசுவரம்-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிப்புக்குள்ளானது. போராட்டம் துவங்கிய போது மீனவர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே லேசான தள்ளு முள்ளும் ஏற்பட்டது.

சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களிடம், மாவட்ட காவல்கண்காணிப்பாளர் சந்தீஷ் தலைமையிலான காவல்துறை அதிகாரிகள் பேச்சு நடத்தியதை தொடர்ந்து மீனவர்கள் கலைந்து சென்றனர். பாம்பனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் சுமார் ஐந்நூறு மீனவர்களும், பெண்களும் கொண்டனர்.(05)

# வீடுடைத்து திருட்டு; சந்தேகநபர் கைது

## அக்கரப்பத்தனையில் சம்பவம்

நுவரெலியா, அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து 24 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்ற சந்தேக நபரொருவர் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் நுவரெலியா, அக்கரப்பத்தனை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு கடலில் வைத்து 12 இந்திய மீனவர் கைது

எல்லைதாண்டிஅத்துமீறிஇலங்கைபருத்தித்துறை கடற்பரபலில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகிய 12 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல்!

இன்று(12) அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்திருந்தனர்.

கைதாகிய பன்னிருவரையும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் மயிலிட்டித் துறைமுகத்தில் கையளிக்கப்பட்டனர். தொடர்ந்து இந்திய மீனவர்களை நீரியல்வளத்துறை அதிகாரிகள் இன்று பலுத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துறை முன்னலையில் முற்படுத்தினர்.

வழக்கைவிசாரித்த நீதவான் இந்திய மீனவர்களை எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்

# தேர்தலை நடத்த கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

அமைதியானமுறையில் தேர்தலை நடத்துவதற்கு கடுமையான முறையில் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் வாக்களித்ததன் பின்னர் பொது இடங்களில் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் தமக்குரிய வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பெறுபெறுகள் வெளியானவுடன் பொது இடங்களில் ஒன்று கூடி, பட்டாசு கொளுத்துவது சட்டத்தின் பிரகாரம் குற்றச்செயலாகும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகஸ்த்தர்கள் வாக்களிப்பு தினத்தன்று கடமைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கடமையில் ஈடுபடாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, தனியார் துறையில் சேவையில் ஈடுபடும் வாக்காளர்கள் வாக்களிக்க செல்வதற்கு தொழில் வழங்குநர்கள் கட்டாயம் விடுமுறை வழங்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேலும் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் கையடக்கத் தொலைபேசியை கொண்டு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

# வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணையதளத்தை மீளமைக்க அதிகாரிகள் தற்போது செயற்பட்டு வருகின்றனர் என இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (05)

# அறுகம்பைக்குடா பயண எச்சரிக்கையை அமெ. நீக்கவேண்டும் எனக் கோரிக்கை

## இலங்கை வேண்டுகோள்

அறுகம்குடா தொடர்பில் அமெரிக்க விடுத்த பயண எச்சரிக்கையை அந்த நாடு நீக்கிக்கொள்ள வேண்டும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 23 ஆம் திகதி அறுகம்குடாவில் தாக்குதல் இடம்பெறலாம் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வேண்டுகோள்விடுத்தது.

அறுகம்குடாவில் சுற்றுலாப்பயணிகள் அதிகமாக காணப்படும் பகுதிகளில் தாக்குதல் இடம்பெறலாம் என நம்பகதன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ளன என அமெரிக்க தூதரகம் தெரிவித்திருந்தது. (05)

# சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வருகை தந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட சீன பெண்கள் கைது

சுற்றுலா விசாவை பயன்படுத்தி நாட்டுக்கு வருகை தந்து சட்டவிரோதமாக வர்த்தகத்தில் ஈடுபட்ட இரண்டு சீனப் பெண்கள் திங்கட்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்க் கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சீனப் பெண்கள் இருவரும் 47 மற்றும் 48 வயதுடையவர்கள் ஆவார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காகக் கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கொழும்பில் தொழிற்சாலை ஒன்றில் பெரும் தீ விபத்து



*கொழும்பு, இராஜகிரிய பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.*

*இந்த தீ விபத்து நேற்று (சவ்வாய்க்கிழமை) ஏற்பட்டுள்ளது.*

*தீயணைப்பு படையினர் இணைந்து தீ பரவலைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். (05)*

# கொச்சிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

கொச்சிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்தை மீறிய சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பியூமி ஹன்சமாலி, விரஞ்சித் தம்புகலவின் விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவு



நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலி மற்றும் பிரபல வர்த்தகர் விரஞ்சித் தம்புகல ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பண்டார இளங்கசிங்க திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோரின் சொத்துக்கள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்றைய தினம் மீள பரிசீலிக் கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக சொத்துக்களைச் சம்பாதித்ததாகக் குற்றம் சாட்டப்பட் டுள்ளதாக பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோர் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# காணாமல்போயிருந்த மூதாட்டி வனப்பகுதியில் சடலமாக மீட்பு

கண்டி, பூஜாபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வனப்பகுதியிலிருந்து திங்கட்கிழமை பிற்பகல் மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பூஜாபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி அம்பதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய மூதாட்டி ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி கடந்த 8 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காகக் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூஜாபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கொழும்பு - அவிசாவளை வீதியில் பஸ் மோதி பாதசாரி உயிரிழப்பு

கொழும்பு - அவிசாவளை வீதியில் ஹோமாகம நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியை கடக்க முற்பட்ட பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பாதசாரி ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தெடிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபராவார். இதனையடுத்து, பஸ்ஸின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (05)

# பலாங்கொடை வயலிலிருந்து ஆணின் சடலம் ஒன்று மீட்பு

பலாங்கொடை, பின்னவல பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றிலிருந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பின்னவல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் பலாங் கொடை நெல்லிவல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பின்னவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சிவில் சமூகம் செயற்பாட்டாளர்கள், அமைப்புக்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒரு திறந்த கடிதம்

135 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், 18 சிவில் அமைப்புக்களும், இணைந்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் திறந்தை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

அரசு முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை கௌரவிக்கவும் பாதுகாக்கவும் பொறுப்புடையது. நீங்கள் செயலற்றவர்களாக இருக்கப் போகின்றீர்களா?

அண்மையில் வெளிவந்த காணொளி ஒன்றில், அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் அவர்கள், 1951 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்தத் தேவையுமில்லை என்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேலும் இந்தச் சட்டம் தொடர்பாக கூறப்படும் கருத்துக்களை கருத்துக்களாக மாத்திரம் பார்ப்பதாகவும், கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். கருத்தாழமற்ற இவருடைய பேச்சினால் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், அச்சட்டத்தை திருத்தத்திற்கு உள்ளாக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. காரணம் வகைப் பொறுப்புக் கூற வேண்டிய ஓர் அரசாங்கத்திடமிருந்து இவ்வாறான கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசமைப்பு உறுப்புரை 12 உப பிரிவு 1 இலங்கை மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சரி சமமானவர்கள் என்று கூறுகின்றது. அத்துடன் இவ்வடிப்படை உரிமையானது எல்லோரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. இந்த நிலையில் அரசாங்கம் என்ற வகையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை நீதமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசமைப்பின் படி அரசின் பொறுப்பாகும். இந்த அரசமைப்பினூடனான அடிப்படை மனித உரிமை அறிவுறுத்தலானது அரசு ஏற்றுக் கொள்ளாமல் பொறுப்பை அரசாங்கம் மதத் தலைவர்கள் மீது சாட்டுவது அரசு தன் கடமையில் இருந்து விலகுவதாக நாங்கள் கருதுகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி அரசு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்ள பாரபட்சங்களை சரிகாணும் நிலைப்பாட்டில் இருக்குமாயின் தற்போது அமுலில் இருக்கும் இந்த பாராபட்சமான சட்டத்தின் குறைபாடுகளால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன முறைமைகளைக் கையாளப் போகின்றது?

மேற்குறித்த அரசமைப்பு கோட்பாடுகளின் பிரகாரம், சமூகத்தில் உள்ள இளவயது திருமணங்களையும், பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களையும் தடுத்து குடும்ப வாழ்வுகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

மேலும், ஒரு வரைமுறை இல்லாத பலதாரமணக் கோட்பாட்டில் சிக்கித் தவிக்கும் மனைவிகளையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது?

மேலும் ஆணாதிக்க கட்டமைப்பை மாத்திரம் முன்நிலைப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது பெண்களை எந்த வகையிலும் உள்வாங்க முடியாத அளவு பாராபட்சத்தை வெளிபடுத்திக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக காதிகள் முறைமை பெரும்பாலானவை ஊழல் நிறைந்ததாகவும் பாராபட்சம் மிகுந்ததாகவும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இது மேற்குறிப்பிட்ட இலங்கையின் 1978 ஆம் ஆண்டுக்கான யாப்பின் அடிப்படை மனித உரிமை வலியுறுத்தல்களை முற்று முழுதாக மீறுகின்றது. எனவே இதனை இவ் அரசாங்கம் எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகின்றது? மேலும் காதி முறைமையானது முழுவதுமே அரசாங்கத்தின் பாதீடினூடாக வரி செலுத்துபவர்களின் வரிப்பணத்தில் இருந்து அமுல்படுத்தப்படுகின்றது. ஆகவே இதனைக் கேள்விக்குட்படுத்துவது அரசாங்கத்தின் கடமையுடன் இந் நாட்டு மக்கள் எல்லோரதும் பொறுப்புமாகும்.

ஆகவே முழுமையாக அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டிய விடயத்தை பொடுபோக்காக 'இது சமூகத்தின் கருத்துச் சுதந்திரம்' என்று தட்டிக் கழிப்பது பொறுப்புக் கூறும் ஓர் அரசாங்கத்திற்கு முறையாகுமா? ஆகவே அமைச்சுப் பேச்சாளர் விஜித ஹேரத் அவர்கள் பொறுப்பற்ற வகையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்ததை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேலும் தேசிய மக்கள் சக்தி நிலைப்பாடு என்ன? அதாவது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டுகின்ற மேலும் அழுத்தங்களுக்கு ஆளாக்குகின்ற சட்டங்களைத் திருத்துதல்', என்று கூறியிருக்க ஏன் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவைப் பேச்சாளர் அவர்கள் இவ்வாறான கருத்தை ஊடகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்?

தேசிய மக்கள் சக்தி கட்சியானது முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறான மாயையான போக்கைக் கடைப்பிடிக்கின்றதா? கட்டாயம் தேசிய மக்கள் சக்தி கட்சியானது பாரிய அளவு பாதிப்புக்கள்ளாக்கப்பட்டுள்ள மற்றும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் பெண்களினது வாக்குகளைப் பெற வேண்டுமாயின் பெண்களாகிய எங்களுக்குத் தெரிய வேண்டும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட திருத்தம் சார்ந்து தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன என்பதைத் தேர்தலுக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும் அப்படி இல்லாமல் நழுவிப் போவீர்களேயானால் முஸ்லிம் பெண்களுக்கு வகைப் பொறுப்புக் கூற முடியாத ஓர் ஆட்சியாகவேதான் உங்களது ஆட்சியும் அமையும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்ததற்கு காரணம் ஏனெனில் தேசிய மக்கள் சக்தி கட்சியானது பாராபட்சமான கட்டமைப்புக்களை மறுசீரமைத்து எல்லோருக்கும் மாற்றத்தை உருவாக்கும் ஒரு கட்சியாக தங்களை பிரதிபலித்தமையால்.

கடந்த 40 வருடங்களாக ஆட்சியில் இருந்த எல்லாக் அரசியல்க் கட்சிகளும் இந்தச் சட்டத்தை ஆண்களுடன் மாத்திரம் கலந்துரையாடி எந்த திருத்தத்திற்கும் உட்படுத்தாமல் இருந்ததே. இதே போல் தேசிய மக்கள் சக்தி கட்சியும் முஸ்லிம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கட்டமைப்பு ரீதியாக இருக்கின்ற பாராபட்சங்களை முடிவுக்குக் கொண்டுவராமல் முஸ்லிம்களினது வாக்குகளிற்காக மாத்திரம் ஏனைய ஆட்சியாளர்கள் சென்ற வழியிலேயே கொண்டு செல்லப் போகின்றதா? அப்படி நடக்குமாக இருந்தால் முஸ்லிம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் ஒரு விடிவு காலத்தைக் கொடுக்காத ஓர் ஆட்சிமுறையைத்தான் நீங்கள் வைத்துள்ளீர்கள் என்பது நிரூபணமாகின்றது.

அப்படி இல்லை என்றால் வர இருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பதாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் திருத்தம் தொடர்பாக தங்களது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2024இல் வெளியிடப்பெற்றது